# நுகர்வோர் திருவிழா

“இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்” என்பதனை உணர்ந்து, மாணவ, இளைய சமுதாயத்தினருக்கு, நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை எடுத்துச் செல்லும் முகமாக, அனைத்து கல்விக்கூடங்களிலும், குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் கடந்த 2005-2006ம் ஆண்டு முதல் நிறுவப்பட்டு, தற்போது 1000க்கும் மேற்பட்ட பள்ளிகளிலும் 500க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் இயங்கி வருகின்றன.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை ஒருங்கிணைத்து “நுகர்வோர் திருவிழா” சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் 06.02.2010 அன்று நடைபெற்றது. இத்துவக்க விழாவில், எத்திராஜ் மகளிர் கல்லூரியின்




தலைவர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நல்கினார். அவரது உரையில், நுகர்வோர்கள், நுகர்வோர் பாதுகாப்பு குறித்த தகவல்களை தெரிந்து கொள்வதின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில், அவர் ஆணையாளராக பணியாற்றிய காலங்களின் அனுபவத்தினையும் பகிர்ந்து கொண்டார். அதனை தொடர்ந்து உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இணை ஆணையாளர் முனைவர் சி.என். மகேஸ்வரன், அவர்கள் தலைமையுரை யாற்றினார். அத்தலைமை உரையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நுகர்வோர் பாதுகாப்பினையும், விழிப்புணர்வினையும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்வாறு எடுத்து செல்கின்றன என்பதை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், நுகர்வோர் என்கிற வகையில், நுகர்வோர்

பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுடன் செயல்படுதல் அத்தியாவசியம் என குறிப்பிட்டார். முற்பகல் நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் திருமதி. தவமணி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழி வகுத்திடும் வகையில் "ஆரோக்கியமான வாழ்வு" என்ற தலைப்பில் குளோபல் ஹாஸ்பிட்டல்ஸ் மற்றும் ஹெல்த் சிட்டி-யிலிருந்து இதய நிபுணர் டாக்டர். ரவி அவர்கள் விரிவுரையாற்றி பார்வையாளர்களுக்கு 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை வலியுறுத்தி நோய் வரும் முன்னர் எவ்வாறு நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை விளக்கமாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து, வழக்கறிஞர் திரு. ராஜா அவர்கள் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுகிறது என்பது குறித்தும், மேற்படி சட்டம் எந்தெந்த வகையில் நமக்கு அனுகூலமாக உள்ளது என்பது குறித்தும் தெளிவாகக் கூறினார்.




பள்ளி, கல்லூரிகளின் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் பிரதிநிதிகள் தங்களது அனுபவ பகிர்வுகளை பகிர்ந்து கொண்டார்கள் திருமதி. வி.ஜெயந்தி, துறைத்தலைவர், ஊட்டச்சத்து பிரிவு, குளோபல் ஹாஸ்பிட்டல்ஸ் மற்றும் ஹெல்த் சிட்டி, ஊட்டச்சத்து உணவு வகைகள் குறித்து உரையாற்றினார்.

பள்ளிகளில் செயல்படும் நுகர்வோர் மன்றங்கள், அரசு துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய தரநிர்ணய அமைவனம், ஆயில் கார்ப்பரேஷன்கள், எடையளவு கட்டுப்பாட்டுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, அக்மார்க், தமிழ்நாடு மின்சார வாரியம், மருந்து கட்டுப்பாட்டுத் துறை மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் இந்நிகழ்ச்சியில் கண்காட்சி அரங்குகள் அமைத்திருந்தன. குளோபல் ஹாஸ்பிட்டல்ஸ் மற்றும் ஹெல்த் சிட்டியினால் அமைக்கப்பட்ட அரங்கில் பார்வையாளர்களுக்கு இலவச ரத்த அழுத்த பரிசோதனை, சர்க்கரை நோய் பரிசோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

பள்ளிகளால் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளில் நுகர்வோர் பாதுகாப்பு, சாலை பாதுகாப்பு, இயற்கை உணவு, சுகாதாரமான சுற்றுச்சூழல், தேவைக்கேற்ற நுகர்வு போன்ற அனைத்து தலைப்புகளிலும், மாணவர்கள் வரைபடம், சுவரொட்டிகள், மாதிரிகள் இவைகளுடன் பார்வையாளர்களை கவரும் வண்ணம் தொலைக்காட்சியில் தகவல்களை ஒளிபரப்பி விளக்கம் அளித்தது பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

இந்நிகழ்ச்சிகளுடன் இணைந்து மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியம் வரைதல், சட்டையில் வர்ணம் தீட்டுதல் ஆகியவையும் ஆசிரியர்களுக்கு “நெருப்பின்றி சமையல்” என்ற தலைப்பிலான போட்டியும் நடத்தப்பட்டன மாதிரி நுகர்வோர் நீதிமன்றத்தில் வாதி, பிரதிவாதிகளாக மாணவர்கள் கலந்துகொண்டு வாதிட்டு தமது திறமைகளை நிருபித்தனர். இதில் வழக்கறிஞர் திரு.கே.முருகன், நடுவராக கலந்து கொண்டார்.



அரசு துறை மற்றும் துறை சார்ந்த நிறுவனங்களால் அமைக்கப்பட்ட அரங்குகளில் நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையினரால் அமைக்கப்பட்ட அரங்கில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டு, சரியான பதில் அளித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அரங்கின் பிற்பகல் நிகழ்ச்சியாக ‘நுகர்வினை நிர்ணயிப்பது தேவையா? வசதியா?’ என்ற தலைப்பின் கீழ் பட்டிமன்றம் நடத்தப்பட்டது. இப்பட்டி மன்றத்தனை திரு. சோம. வள்ளியப்பன் அவர்கள் நடுவராகவும், திரு. முருகன், வழக்கறிஞர் “தேவையே” என்ற தலைப்பின் கீழும், திருமதி.ஜெ. விஜயதிலகம் “வசதியே” என்ற தலைப்பின் கீழும் ஈரணித் தலைவர்களாக பங்கேற்றனர். இப்பட்டி மன்றத்தில் திருமதி. ராஜேஸ்வரி, பேராசிரியர், திருமதி. வள்ளி திருமூர்த்தி, பேராசிரியர், திருமதி. சரோஜா, தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர், திருமதி. ஷோபா ஐயர் மற்றும் எத்திராஜ் கல்லூரி மாணவிகள் செல்வி கார்த்திகா, செல்வி. ரம்யா ஆகியோர் பங்கேற்று ஆரோக்கியமான விவாதத்திற்கு வித்திட்டனர்.

அதனை தொடர்ந்து சிவசாமி கலாலாய பள்ளியின் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சியும், இதர கல்லூரிகளின் கலை நிகழ்ச்சியும் நுகர்வோர் நலனில் அக்கறை என்னும் அடிப்படையில் நடத்தப்பட்டன. மேற்படி கலை நிகழ்ச்சிகள் யாவும் கண்களுக்கும், செவிகளுக்கும் விருந்தாக அமைந்ததுடன் மட்டுமின்றி சிந்தனையையும் தூண்டும் வகையில் அமைந்திருந்தன என்றால் அது மிகையாகாது.

போட்டியில் பரிசுக்கு தகுதி பெற்ற மாணவ, மாணவிகள், சிறப்பாக கண்காட்சி அரங்குகள் அமைத்த துறைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப் பட்டன. மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பரிசளிப்பு விழாவிற்கு உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. கே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் தலையேற்று, கல்விக்கூடங்களில் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தியதின் அத்தியாவசியத்தை எடுத்துரைத்து, நுகர்வோர் என்கிற வகையில் தேவைக்கேற்ற நுகர்வினை மேற்கொண்டு, ஆரோக்கியமான



சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, பாதுகாப்பான கலப்படமற்ற உணவு வகைகளை தெரிவு செய்து, வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். நீதியரசர் திரு.ஜனார்த்தனம் அவர்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். எத்திராஜ் மகளிர் கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்ற மாணவ தலைவர் ஒருங்கிணைப்பாளர் செல்வி சுவாதி சேகர் நிகழ்ச்சியின் நடவடிக்கை அறிக்கையினை சமர்ப்பித்தார். அக்கல்லூரியின் குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. சுமதி நன்றியுரை நவின்றார்.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம், முதல்வர், குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. சுமதி, மாணவ தலைவர் ஒருங்கிணைப்பாளர் செல்வி சுவாதி சேகர், மாணவ துணைத் தலைவர் செல்வி சுருதி மற்றும் இதர மாணவிகள், துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மிகவும் சிறப்பாக செய்திருந்தனர். உணவு பொருள் வழங்கல் மற்றும் பாதுகாப்புத் துறையின் சார்பில்




துணை ஆணையாளர்கள் திரு. அண்ணாமலை, திரு. முகமது அக்பர், திரு. பாலசுப்பிரமணியம், நிர்வாக அலுவலர்கள் திரு. வேலுசாமி மற்றும் திரு. ராமசந்திரன், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கண்காணிப்பாளர்கள் திரு. த. சண்முகவேலு, திரு.சி. முத்துகிருஷ்ணன், உதவியாளர்கள் திரு. எம்.லூக், திருமதி. விஜயலட்சுமி, தொழில் நுட்ப உதவியாளர் திரு. அண்ணாமலை, திருமதி. நீலாயதாட்சி, ஆகியோருடன் இணைந்து விழாவின் துறைசார்ந்த பிரதான ஒருங்கிணைப்பாளராக நுகர்வோர் விழிப்புணர்வு பிரிவினைச் சார்ந்த திருமதி. ஜெ.விஜயதிலகம் செயல்பட்டார். விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

